*News and Articles in Tamil and English Please send them to:*
THE EDITOR,
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai.

# THE MORNING STAR

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka
under No. Q / J / 104 / News / 89
*Established: 1841 : A Christian Weekly : Published Every Friday*
Vol:- 155 Jaffna, Friday 25, February 1994 No: 04
RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

Subscription
Island : Rs. 100/-
*For Advertisements*
Apply to:
THE MANAGER
The Morning Star,
Diocesan office,
Vaddukoddai


## Jaffna College Institute of Technology

Open University of Sri-Lanka has given exemption to the students of this institute seeking admission to this University of Sri-Lanka. The Open University Guide has included Technical Diploma of the J. C. Institute of Technology in their schedule of exemptions. This institute is the only private institution in the entire country to receive recognition by the Open University.

## WEDDING

Thurairajasingam Christie Thayalakumar son of Mr. Thurairajasingam of Kokuvil and brother of Rev. T. H. Vasanthakumar of C. S. I. Shalomnagar married Thayabaradevi — Nursery Teacher of C. S. I. Day Care Centre, at City Mission C. S. I. Jaffna on 31st January 1994.

Mr. Thanabalasingam James Amirthapalan of Vaddukoddai married Doddila Ushayini Rajakulasingam of Batticaloa at St. John's Church, Uranee, Batticaloa on 5th February 1994. Mr. Amirthapalan is the youngest son of Mr. R. D. Thanabalasingam former Boarding master Jaffna College and Mrs. R. D. Thanabalasingam.

## THE FIRST CONFIRMATION SERVICE HELD AT THEVAKIRAMAM CHURCH

The Thevakiramam Church Centre, which was established in 1987 passed another milestone in its short history when the first batch of its members were confirmed in its own Church on Sunday the 19th of September, 1993 at 4.00 p m. This Church which commenced as a Day Care Centre soon developed into a family development project assisted by the C. C. F. where parents of the children too were assisted in self-employment ventures. This church was the 2nd Church opened in the Peninsula during the present decade, and the Church opened after the exit of foreign missionaries from the Jaffna Peninsula by one of our own ministers. The Confirmation Service was conducted by the Rt. Rev. Dr. S. Jebanesan assisted by the Rev. D. S. Thiagarajah, Circuit Pastor and the Rev. Solomon Milton, Worker-in- charge. Thirteen candidates were confirmed as full members of the Church.

### CAROL SERVICE CONDUCTED BY THE CHRISTIAN THEOLOGICAL SEMINARY, CHUNNAKAM

The annual carol service conducted by the Christian Theological Seminary, Chunnakam was held on Sunday the 12th December 1993 at the Uduvil Church. The Church was well arranged and decorated for the function with lights and audio system. The service commenced with the lighting of the traditional oil lamp by the Rt. Rev. D. J. Ambalavanar and Mrs. Ambalavanar as the chief guests.

### RECOGNITION SERVICE OF LOCAL PREACHERS

A worship Service with the Celebration of the Holy Eucharist was conducted at the Function of Commissioning of local preachers, by the Methodist Church, on Sunday the 21st Novmber 1993 at St. Peter's Church, Jaffna at 3.30 p m. The Holy Eucharist at this service was jointly conducted by Revds. S. S. Gnanaraja and A. W. Jebanesan of the Methodist Church assisted by Rev. S. P. Nesakumar of the Anglican Church and Revd. D.S. Thiagarajah of the Jaffna Diocese of the C. S. I

The commissioning of Mrs. Arulmalar Paul, Mr. G. S. S. Kulasingam, Mr. R. Hariharan and Mrs. Tamara Sinnaraja as local preachers was done by Rev. S. S. Gnanaraja, Superintendent Minister of Jaffna — Pt. Pedro Circuits. The Revd. D. S. Thiagarajah, Principal, Christian Theological Seminary, Chunnakam Preached the sermon. This was followed by a Tea Party given by the newly commissioned local preachers. A representative gathering from the different churches were present at this function.

### Bishops Office

Bishop will be in his office on Week Days form 9.00 a.m to 1.00 p.m.

*Secretary*
JDCSI

### Bread is Nine Rupees.

The BAKERS Association of Jaffna increased the price of a loaf of 350 grams bread to Nine Rupees from the 21 st of this month. The increase comes in the wake of a surchage of Rs 4/= levied on every kilogramme of flour by the Cargo ships, operating from Colombo to Jaffna.

### AREA MINISTER

The Executive Committee of the Jaffna Diocese of the Church of South India decided to appoint Rev. P. Navendra Anugoolan Pastor Killinochi as area minister for Killinochi and Mullaitivu districts. The area miuister will be the over all supervisor of the work in these districts.

### Book Release Essays in Honour Bishop Ambalavanar

Will be formally raleased on Monday 28 th February at Bishop kulandron Hall Jaffna.

Vice Chancellar Prof. A. Thurairajah will preside over the function

## Partner Church Member Wins Nobel Prize

We are thrilled to learn of Dr. Phillip A. Sharp's winning of the Nobel Prize in medicine. Sharp, who is head of the biology department at Massachusetts Institute of Technology, became known in 1977 for his work on how genetic information is assembled in cells. He turned down the presidency of MIT to continue teaching and conducting research.

Phillip Sharp is also a member of the Eliot Church (United church of Christ) in Newton, Massachusetts, where he is active in various church projects. He is part of a 15-year-old group in the church that talks informally about science and 'how Christian understanding of reality is a basic building block of science.'

Dr. Sharp says that "religion and science allow a person to help alleviate needless human suffering. Science is a vehicle for serving. How I relate to others is impacted by the church."

Dr. Sharp's work in gene-splitting, which won him the Nobel Prize, contributes to the development of our knowledge about cancer and other diseases. "Science teaches learning about the world around us," he says-" a view of physical reality and creation in in a God-given context." He adds: "Religion is an important part of one's psyche-from it we learn respect for creation and become thankful for the gift of our own temporary nature."

His pastor, Rev. Herbert Davis, says affectionately that the church will not treat him any differently, now that he has won the prize. Davis calls the award "a joy for the whole congregation and an honour for the UCC," and we must add, for the CSI partner church as well.

### Finance Committee to Meet Every Month

The Executive committee of the JDCSI which met on the 19 th February resolved that the Finance Committee should meet on the Second Saturday of every month to scrutinise the DIOCESAN and MISSION ACCOUNTS



## PRAYER FOR YOUNG PEOPLE

Thank you, O God for all the gifts which have made today and every day so wonderful.

Thank you for books to read, wise books to make me wise, books full of information to be informed; great stories to thrill the heart and to linger in the memory; poetry with all its beauty.

Thank you for music of every kind for dramas and for plays and for films, for pictures and for sculpture and for every lovely thing.

Thank you for games to play, for clubs and for fellowships where I can meet and talk and argue and play with others. Thank you for

My school in which to learn

My home in which to love and to be loved

My Church in which to worship

Glory and thanks and praise be to you for all your kindness and your goodness to me.

Hear this my prayer for your love's sake Amen.

**William Barclay**

# உதயதாரகை

Estd. 1841

மலர்: 155 25 - 02 - 1994 இதழ்: 04


### ஆதீன நிர்வாக சபையின் கூட்டங்கள்

எமது அத்தியட்சாதீனத்தின் நிதி நிர்வாக குழுவின் கூட்டங்கள் இனி மாதந்தோறும் நடைபெறவேண்டு மென அத்தியட்சாதீன சங்கத்தின் நிர்வாகச்சபை தீர்மானித்துள்ளது. இந்தக் கூட்டங்கள் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை மானிப் பாயில் நடைபெற வேண்டுமெனவும் நிர்வாகசபை தீர்மானித்துள்ளது.

★

### யாழ்ப்பாணக் கல்லூரி ஆளுனர் சபைக்கூட்டம்

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆளுனர் சபையின் வருடாந்த கூட்டம இம்மாதம் 22ம திகதி நடைபெற்றது. புதிய துணை அதிபர் நியமனம பற்றி ஆராய ஒரு விசேட குழு நியமிககப்பட்டுள்ளது.

★

### சைக்கிள் விபத்தில் மரணம்

அளவெட்டியைச் சேர்ந்த திரு. தாமு அற்புதசீலன் கடந்த 16ஆம் திகதி புதன்கிழமை துவிச்சக்கர வண்டி விபத்தில் சிக்கி உடன் மரணமானார். துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த பாடசாலை மாணவனின் துவிசசக்கர வண்டி மோதியதால் இவர் தலைசிதறுண்டு மரணமானார். இவரது நல்லடக்க ஆராதனை சென்ற சனிக்கிழமை அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

★

### செரம்பூர் செனட்டின் வருடாந்தக் கூட்டம்

தென்னாசியாவிலுள்ள பெரும்பாலான இறையியல் கல்லூரிகளைக் கட்டுப்படுத்தி நிர்வகிக்கும் செரம்பூர் பல்கலைக்கழகக் கல்லூரி தனது வருடாந்த செனட்சபைக் கூட்டங்களை இம்மாதம் இரண்டாம் திகதி தொடக்கம் ஐந்தாம் திகதி வரை திருவனந்தபுரத்தில் நடத்தியது. இதில் எமது ஆதீன சங்கப் பிரதிநிதியாக மகாகனம் டி.ஜே. அம்பலவாணர் கலந்து கொண்டார்.

★

### வைத்திய சாலை ஒய்வு நாள்

நமது ஆதீனத்தின் வைத்திய சாலை ஒய்வு நாள் இம்மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் ஒரு விசேட ஆராதனை மானிப்பாயில் நடைபெற்றது. பேராயர் எஸ். ஜெபநேசன் பிரசங்கம் செய்தார். புத்தூர், மானிப்பாய், இணுவில் வைத்திய சாலைகளிலுள்ள வைத்தியர்களும், தாதிமார்களும் இவ்வாராதனையில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

### இறையியற் கல்லூரியின் சஞ்சிகை

சுன்னாகம் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியினர் இறையியற் களஞ்சியம் என்னும் சஞ்சிகையை வெளியிட்டுள்ளனர். இறையியல் சம்பந்தமான கட்டுரைகள் கொண்ட இப் பத்திரிகை வருடம் இரு முறை வெளிவரும் எனத் தெரிகிறது.

---

## நூல் வெளியீடு

நமது முன்னாள் பேராயர் மகாகனம் டி. ஜே அம்பலவாணரைக் கௌரவிக்கும் கட்டுரைத் தொகுப்பு ஒன்று 28-2 94 திங்கட் கிழமை பிறபகல் 3. 30 மணிக்கு வெளியிடப்படவிருக்கின்றது.

துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா இந்நிகழ்வுக்குத் தலைமை தாங்குவார் இந்த நிகழ்ச்சி யாழப்பாணத்தில் அமைந்துள்ள பிஷப் குலேந்திரன் ஞாபகார்தத மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது.

### அரசியல்...

(3 ஆம் பக்கத்தொடர்ச்சி)

(1) 1956- ல் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா ஏற்படுத்திய சிங்களம் மட்டும் அரச கரும மொழிச் சட்டம்.

(2) தமிழர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் தாபித்த தமிழரசுககட்சியும், தமிழர் விமோசனத்திற்காக அவர் முன்வைத்த சமஷ்டி அரசியல் திட்டமும்.

(3) விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் நடத்தி வரும் ஆயுதமேந்திய தமிழீழ விடுதலைப் போராட்டம்.


இம் மூன்று நிகழ்வுகளுமே இலங்கை அரசியலில் இடம்பெற்ற மறக்க முடியாத, மறைக்க முடியாத அரசியல் மாற்றங்களாகும் ஏனையவையெல்லாம் வெறும் சந்தர்ப்பவாதக் கூச்சல்களே அன்றி வேறல்ல; முன்னர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், இராசதுரை, ஈறாகவும் தற்போது செல்லச்சாமி, அனுரா பண்டாரநாயக்கா, காமினி திஸநாயக்கா குழுவினர் தொடர்ந்தும் அடித்துவரும் அரசியல் குத்துக் கரணங்களை விடயந் தெரிந்த யாருமே அரசியல் மாற்றங்களாக எண்ணப்போவதில்லை. இவர்களது உருப்படியான சாதனைகள் கட்சி தாவலும், காட்டிக் கொடுத்தல் களுமே! இதனால் தமிழரோ, முஸ்லீம்களோ, சிங்களவரோ எவ்வித நன்மையும் ஒருபோதுமே அடைந்ததுமில்லை. அடையப் போவதுமில்லை, இவர்களது செயல்களை அரசியல் மாற்றங்கள் என்று மகுடமிட்டுச் சகல பத்திரிகைகளும் அரசியலின் புனிதத்தை மாசுபடுத்துகின்றன.

— புங்கையூரான்

(தொடரும்)

தியானம்

## நீதிமான் பனையைப்போல் செழிப்பான்



''நீதிமான் பனையைப்போல செழித்து லீபனோனின் கேதாரு விருட்சம் போல் வளருவான்.'' —

—சங்கீதம் 92:12

சங்கீதகாரன் நீதிமானைப் பனைக்கு ஒப்பிட்டார். பனை மழை வீழ்ச்சி குறைந்த இடங்களில் வளர்கின்றது. வருடம் முழுவதும் பச்சை பசேல் என இருக்கின்றது. எத்தனையோ பயன்களைத் தருகின்றது. எப்பொழுதும் உயர்ந்து, நிமிர்ந்து நிற்கின்றது. காற்று வீசினால் அநேக மரங்கள் வீழ்ந்து படும். ஆனால் பனைமரம் வீழ்வதில்லை.

இதனாலேதான் சங்கீதகாரன் நீதிமானைப் பனைமரத்திற்கு ஒப்பிட்டார். நீதிமான் இன்பத்திலும், துன்பத்திலும் மகிழ்ச்சியாக இருக்கின்றான். இலஞ்சத்திற்காகவோ வேறுசில நன்மைகளுக்காகவோ அவன் தன் கொள்கைகளைவிட்டு விடுவதில்லை. எல்லா நிலைபரத்திலும் சோர்ந்து போகாமல் தலையை நிமிர்த்தி நிற்கின்றான். சஞ்சலம் சோகம் அவனை தாக்குகின்ற பொழுது அவனுடைய விசுவாசம் ஆட்டம் காண்பதில்லை. ஆவியின் கனிகள் ஒன்பதும் அவனிடத்தில் நிறைவாய்க் காணப் படுகின்றன.

மற்றப்பயிர்கள் மழை குன்றிய காலத்தில் இறந்து படும். ஆனால் பனை மட்டும் பச்சை பசேல் என நிற்கின்றது. இதற்குக் காரணமென்ன? பனை மற்றத் தாவரங்கள போலன்றி தனது நீண்ட வேர்களை மண்ணுக்குள் மிகவும் தாழ்வான இடங்களில் உள்ள நீர் நிலைகளில் செலுத்தி தண்ணீரைப் பெற்றுக் கொள்ளுகின்றது. ஏனைய தாவரங்கள் இந்த நீர் நிலைகளை அறிய மாட்டா.

நீதிமான் இவ்வாறே இயேசு பிரான் என்ற நீர் நிலையில் இருந்து தனது சக்தியைப் பெற்றுக் கொள்கின்றான். காலையிலும், மாலையிலும் இயேசு பிரானைச் சந்தித்து தனக்கு வேண்டிய ஆன்மீக உணவை பெற்றுக் கொள்கிறான். இதனாலேயே சஞ்சலம், வேதனை, கவலை அவனை மே... கொள்வதில்லை. காலமெல்லாம் அவன் மனோரம்மியமாகவிருக்கின்றான்.

★

குட்டிக் கதை

## முனிவர் பன்றியானார்



ஒரு நாள் ஒரு முனிவருக்கு இன்னொருமுனிவர் மீது கடும் கோபம் வந்து விட்டது. பன்றியாகப் போ! என்று சபித்துவிட்டார். பன்றியாகி விட்டமுனிவர் வீட்டிற்குப் போய் அழுதார்

தன் மகனைப்பார்த்து மகனே! பன்றியாக இருப்பது மிக அவமானம்! என்னை உடனே ஒரு வாளால் வெட்டி கொன்று விடு என்று கூறினார்.

அப்பொழுது மகன் அது வேண்டாம் அப்பா கொஞ்ச நாள் பன்றியாக இருங்கள் பின்னர் பார்க்கலாம் என்று கூறிவிட்டான்.

எனவே பன்றி வீட்டை விட்டு ஓடியது. ஏனைய பன்றிகளுடன் சேர்ந்து, அருவருப்பான சீவியம் செய்தது. மகனுக்கு தனது தகப்பனாரை நினைத்துப் பார்க்கவே அவமானமாக இருந்தது. எனவே வாளை எடுத்துக் கொண்டு பன்றிக் கூட்டத்திடம் சென்றான். தகப்பனாரைப் கூப்பிட்டு இனி உங்களை வெட்டிவிடட்டுமா? என்றுக் கேட்டான். அப்பொழுது தகப்பனாராக இருந்த பன்றி ''எனக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறது கொஞ்ச நாளைக்கு என்னை இப்படியே இருக்க விட்டு விடு'' பிறகு என்னைக் கொன்று விடு என்று கூற மகன் வீடு திரும்பினான்.

பன்றியின் வாழ்க்கை இப்பொழுது கெட்டுவிட்டது. உலகத் தாருக்கே உபத்திரவமாக போய் விட்டது. மகன் வாளை எடுத்துக் கொண்டு தகப்பனைக் கொல்லப் புறப்பட்டான் ஏய்! பன்றி இங்கே வா! இன்றுடன் ஒழிந்தாய் என்று கூறினான். உன்னால் எனக்கு பெரிய அவமானம் என்று கர்ச்சி... தான். அப்பொழுது தகப்பனாக இருந்த பன்றி எனக்கு இந்த வாழ்க்கை பிடித்திருக்கிறது. உனக்கு அவமானமாக இருந்தால் நீ தற்கொலை செய்து விடு. நான் சேற்றில் விளையாடப் போகின்றேன்என்று சொல்லிவிட்டு ஓடியது.

### தொழிற் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் விழா

வட்டுக்கோட்டைத் திருச்சபையின் தொழிற் பயிற்சி நிறுவனம் தமது பொருட்காட்சியினையும் சான்றிதழ் வழங்கும் வைபவத்தினையும் இம் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை வட்டுக்கோட்டை ஹவலன்ட் விடுதியில் நடத்தியது.

---

### கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசப் பொறுப்பாளர்

தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண அத்தியட்சாதீனத்தின் நிர்வாகக் குழு வண. p. நவேந்திர அனுகூலனை கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதேசத்தின் பொறுப்பு அதிகாரியாக நியமித்துள்ளது.

போக்குவரத்துப் பிரச்சினைகளால் அத்தியட்சர் அங்கு அடிக்கடி செல்ல முடியாத காரணத்தினாலேதான் இவ்வாறு நியமனம் மேற்கொள்ளப்பட்டது,

### தாரகை ஒளி

*உங்களிலும் பார்க்கக் கூடுதலாகத் துன்பப்படும் மக்களைக் கண்ணோக்கிப்பார்த்து உங்கள் செல்வம் மிகவுயர்ந்தது என்று மனம் மகிழுங்கள். — குமரகுருபரர்.*

### ★ எங்கள் கருத்து ★

# லெந்து நாட்கள்

லெந்து நாட்கள் பெப்ரவரி 16 ஆம் திகதியுடன் ஆரம்பமாகிவிட்டன! இஸ்ரவேற் புத்திரருக்குப் பஸ்கா எவ்வளவு அவசியமோ, கிறிஸ்தவர்களாகிய நமக்கு லெந்து காலம் அவசியம்.

இஸ்ரவேலர் பஸ்காப் பண்டிகையின்போது மூலிகைகளையும், புளிப்பில்லாத அப்பத்தையும் ஆட்டு மாமிசத்தையும் உண்டனர். அந்த விருந்து நடைபெற்றிருக்கையில் மகன் தகப்பனைப் பார்த்து இதெல்லாம் என்ன என்று கேட்பான். தகப்பன் தாம் எப்படி எகிப்தில் அடிமைகளாகவிருந்தோம். கர்த்தர் எப்படித் தமது பராக்கிரமத்தால் விடுவித்து பாலும், தேனும் ஓடுகின்ற கானான் தேசத்திலே கொண்டுவந்து விட்டார் என்று கூறுவார்.

இஸ்ரவேல் புத்திரர் மூலிகைகளையும், அப்பத்தையும், ஆட்டு மாமிசத்தையும் உண்ணும் பொழுதே தகப்பனார் கூறிய அருமையான சம்பவங்களையும் உட்கொண்டு விடுவர். இதனாலேதான் இஸ்ரவேல் சமுதாயம் இன்றுவரை பக்திபூர்வ சமுதாயமாக தனது தனித்தன்மையைக் காட்டும் சமுதாயமாக விளங்குகின்றது.

லெந்து நாட்கள் கிறிஸ்தவர்களை இயேசு கிறிஸ்துவின் பாடுகளையும் மரணத்தையும் சிந்தித்து அவற்றை மீட்டெடுக்கும்படி வருகின்றன. கெத்சமனே அவதி, பிலாத்துவின் கொடுமை, கல்வாரி எல்லாமே நாம் உணர்ச்சிபூர்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டியவை. இவைகளை நாம் ஏற்றுக்கொள்ளும் பொழுது, இயேசுவினால் கிடைத்த விடுதலை நமக்குக் கிட்டுகின்றது. நீர் மரணத்தை வேதனையை ஜெயித்து விசுவாசிகள் அனைவருக்கும் மோட்சராட்சியத்தைத் திறந்தருளினீர் என்று நாம் அறிக்கை செய்கின்றோம். பெரும்பாலானோருக்கு இது உதட்டளவில் நின்றுவிடுகின்றது. இது எவ்வாறு? எப்படி? எப்போ? நடைபெற்றது என்பதனைச் சிந்திப்பவர்கள் குறைவு.

இயேசு கிறிஸ்து தம்மைத்தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து இந்த மகத்தான விடுதலையை ஏற்படுத்தினார். கெத்சமனேக்கூடாகவும், கல்வாரிக்கூடாகவும் நாம் செல்லும்பொழுது இந்த விடுதலையைப் பெற்றுக்கொள்கின்றோம். ஆகவே லெந்து நாட்கள் நாம் எப்பொழுதுமே அதாவது சீவிய காலமெல்லாம் லெந்துவில் இருக்கவேண்டுமென்பதனை உணர்த்துகின்றன.

மீட்பு இலவசமாக இறைவனிடமிருந்து வரும் கிருபை. அதனை எமது முயற்சிகளாலும், உத்தரிப்புக்களினாலும் பெறமுடியாது. கிறிஸ்து என்னுடைய பாவங்களுக்காக மரித்தார் என்று மனதார விசுவாசிப்பதனாற் பெறப்படுகிறது.

### யாழ்ப்பாணக் கல்லூரியின் புதிய ஆசிரியர்கள்

*யாழ்ப்பாணக் கல்லூரியில் புதிய ஆசிரியர்களாக பின்வருவோர் சேர்ந்துள்ளனர் எனக் கல்லூரி அதிபர் தமது வருடாந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். திரு. k. குணசிங்கம் B. sc (Special Mathermatics), செல்வி. ஜெயஜோதி கணேசன் G. A, Q. (பேராதனை), செல்வி. பிரேமினி சாந்தலிங்கம் (நடன ஆசிரியை), செல்வி பத்மாசினி அருணாசலம் (நூலக உதவியாளர்).*

## அவுஸ்திரேலிய நினைவுகள்



*நமது அத்தியட்சகர் எழுதும் அவுஸ்திரேலிய நினைவுகள் என்னும் பயணக் கட்டுரை அடுத்த வாரம் ஆரம்பமாகின்றது.*

## புதிய அத்தியட்சருக்கு வரவேற்பு

*நமது ஆதீனத்தின் புதிய அத்தியட்சகர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெபனேசன் அவர்களுக்கு, மானிப்பாய் வைத்தியசாலையினர் ஒரு வரவேற்பு உபசாரம் நடாத்தினார்கள். இவ்விழாவிற்கு வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சந்திரா அம்பலவாணர் தலைமை தாங்கினார். தாதிமார்களின் இசை, பேச்சு நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அத்தியட்சர் வைத்தியசாலை அன்பர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தார்.*

*இம்மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உடுப்பிட்டி திருச்சபையார் புதிய அத்தியட்சகருக்கு வரவேற்பு அளித்தனர். இவ்விழாவிற்கு சபைப் போதகர் T. அசோக்குமார் தலைமை தாங்கினார். தனாதிகாரி திரு. லின்டன் தேவராஜன் புதிய அத்தியட்சகரை வரவேற்றுப் பேசினார். ஓய்வு நாள் பிள்ளைகளின் கலை, நடன நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. காலை உணவு எல்லோருக்கும் பரிமாறப்பட்டது. இதன் பின்னர் நான்கு தேக்கக் கன்றுகள் ஆலய வளவினுள் நாட்டப்பட்டன.*

## பேராயர் நீடூழி வாழ்க!



*நமது முன்னாள் பேராயர் மகா கனம் D. J. அம்பலவாணர் பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி தமது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார். அன்னார் நீடூழி வாழ்ந்து தமிழ் சமுதாயத்திற்கு அரும்பணியாற்ற வேண்டுமென்று உதயதாரகை வாழ்த்துகிறது.*

# அரசியல் மாற்றங்கள் என்றால் என்ன?

'அரசியல் மாற்றங்கள்' என்று சொல்லப்படுபவற்றுக்கு உண்மையான அர்த்தங்கள் யாவை? இன்று இலங்கையில் வடகிழக்கு மாகாணங்கள் உட்பட வெளிவரும் சகல பத்திரிகைகளிலும் "அரசியல் மாற்றங்கள்" என்ற பதங்கள் தாராளமாகப் பயன் படுத்தப் படுகின்றன. 'அரசியல் மாற்றங்கள்' என்பது நாளைக்கு ஒரு கட்சிதாவும் விவகாரமல்ல! தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளுக்காக, எம். பி பதவி, அமைச்சர் பதவி, மாகாணசபைத் தலைவர் பதவி, மாகாணசபை உறுப்பினர் பதவி என்பவற்றுக்காக ஆளுங் கட்சியில் போய் ஒட்டிக் கொள்ளுவதல்ல. இவை அரசியல் மாற்றங்களுமல்ல. கடைந்தெடுத்த சந்தர்ப்பவாத நடவடிக்கைகளும், தம்மை நம்பி வாக்களித்த மக்களையும், தலைவர்களாக ஏற்றுக்கொண்ட மக்களையும் நடுத்தெருவில் விட்டு, தமது சுயநலன்களையும், சுகபோக வாழ்க்கைகளையும் தருணத்திற்கேற்ப வர்ணம் பூசிக்கொள்ளும் அப்பட்டமான அரசியல் விபச்சாரமாகும். 'இலங்கை சுதந்திரமடைந்ததாகச்' சொல்லப்படும் காலத்திலிருந்தே இந்தக் கயமைத்தனங்கள் வெகு கலாதியாகக் களைகட்டி சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை இனவாதச் சகதிக்குள் தள்ளி இன்று வரை எழுந்திராத படி செய்துள்ளன! இலங்கையில் மட்டுமல்ல சனநாயக ஆட்சி நடைபெறுவதாகச் சொல்லிக் கொள்ளப்படும் உலகிற் பல நாடுகளிலும் 'மேற்கு-கிழக்கு' என்ற வேறுபாடு இல்லாமல் இத்தகைய அரசியல் மாற்றங்கள்' தொடர்ந்து அரங்கேறி வருகின்றன. இவை உண்மையில் சில செப்புக் காசுகளுக்காக தெருக் கூத்தாடி செய்து காட்டும் சாகச வித்தைகள் போன்றனவே. இத்தகைய 'தாவல்' பேர்வழிகளைத் தலைவர்கள் என்றோ, நாட்டையோ மக்களையோ நேசிப்பவர்கள் என்றோ கருதுவதற்கு அணுவளவும் அருகதையில்லை. இவர்கள் செய்வதெல்லாம் அரசியல் அயோக்கியத்தனங்களே தவிர அரசியல் மாற்றங்களல்ல!

இனப்பிரச்சினை உண்டு என்பதும், மருபாரமே அப்படி ஒன்று இல்லை பயங்கரவாதமே உள்ளதென்பதும், சமாதானப் பேச்சு வார்த்தைகளின் மூலம், அரசியல் தீர்வுகள் மூலம் இனப்பிரச்சனையைத் தீர்த்து விடுவோம் என்பதும், அடுத்தகணமே புலிகளும், தமிழ்க்குழுக்களும் ஆயுதங்களைக் கீழேவைக்கும்வரை 'பேச்சு வார்த்தை நடத்த முடியாது' என்பதும் எப்படிப்பட்ட அரசியல் மாற்றங்களாக முடியும். இவற்றோடு ஒரு நாடு என்று சொல்லிக் கொண்டே அந்த நாட்டின் பெரிய சிறுபான்மை இனமக்களைத் தொலைத்துக் கட்டுவது போல ஓயாத குண்டுவீச்சுக்களை நடாத்துவதும், இராணுவச் சுற்றிவளைப்புக்களை நடாத்துவதும், கடற்படைத் தாக்குதல்களை நடத்துவதும், திட்டமிட்ட பொருளாதார, பொதுசனத் தகவல் தொடர்புத் தடைகளை ஆண்டுக் கணக்கில் தொடர்ந்து நடைமுறைப் படுத்தி வருவதும் அரசியல் மாற்றங்களாகுமா?

தேர்தலை மாத்திரமே மனதில் வைத்திருப்பவன் எத்தகைய 'அதியுத்தமராக' இருந்தாலும் மிகமிகச் சாதாரணனே. அவர்களது எழுச்சியும், வீழ்ச்சியும் அரசியல் மாற்றங்கள் ஆகா! நாட்டை, மக்களை நேசிக்கும் அரசியல் இதற்கு முற்றிலும் வேறானது. கடந்த அரை நூற்றாண்டில் இலங்கையில் மூன்று அரசியல் மாற்ற நிகழ்வுகளே நடந்துள்ளன. அவற்றின் விளைவுகளின் சாதக, பாதகங்களை சார்ந்து நிற்காமல் அவை ஏற்படுத்திய தாக்கங்களின் மூலமே அவை அரசியல் மாற்றங்களாகப் பரிணமித்துள்ளன.

(2 ஆம் பக்கம் பார்க்க)

● EDITORIAL ●

## REMEMBRANCE OF BISHOP S. KULANDRAN

Bishop S. Kulandran was born in the Parish of Manipay where his father was a Notary Public. The father belonged to Varany, therefore he settled in Manipay after marriage. Bishop was the third son in the family. The father had a good income in his notary work so he was able to send two of his sons to "St. John's" where they had their secondary school education.

He was consecrated with thirteen other Bishops from South India at the Cathedral Church, Madras. When returned as Bishop of Jaffna he was welcomed at the Chavakachcheri Railway station by Rev. B.C.D. Mather and likewise a warm reception was given at the Jaffna Station from where he was taken in procession to Vaddukoddai. As the first Bishop of Jaffna where there was no Diocese it was a great task which he had to carry out in organizing the Diocesan set-up. He knew how to manipulates people who opposed this new set-up and by his own efforte won over all the churches to this new administrative set-up. His wife Mathuram Kulandran bore him a daughter and two sons. She managed the finances and the home upkeep without giving trouble to the Bishop. And she left him to carry on his Diocesan administration and church affairs apart from his academic activities without bothering him. Bishop was a good thinker and writer in many spheres both general and theological. To mention two of his great works is sufficient witness to theological thoughts. One 'Grace in Christianity and Hindnsim' the other Trans scendence, these two are exemplary of his greatness. He earned a Doctorate Honours Course from the Serampore University for his Theological thinking. Bishop also had to face mounting problems when the mission schools were taken by the Government.

He was an ardent supporter of the Federal form of Government advocated by Mr. S. J. V. Chelvanayagam for the Tamils. He thoug educated in the English Medium had a patriotic love for his mother tongue which is Tamil, is quite clear from what he said about the two cities one Colombo and other Madras. n Colombo people speak eithera in English or Sinhala but in Madras he said every where I am delighted to hear Tamil only. The Bishop was an avid reader of all aspects of life even activities in the Courts never escaped his reading like Karl Barth whom he followed in his theological thinking. He believed in having the Newspaper and the Bible. He was not confined to theology alone he had a wide range of interest about men and matters of which his later five volumes published during his life time bear witness. The Bishop lived to see the 175th anniver isary of the American Ceylon Mission on the last day September 27th 1992 happdened to be his ninety second birth day. He had passed away but his memories shall ever remain green in the hearts and minds of the Jaffna Christian Community and those who come to read his books. May the good Lord grant him eternal rest.

S P J

## OBITUARY

### Mrs. Cecily Sornamalar Ariaratnam

We record with regret the passing away of Mrs. Cecily Sornamalar Ariaratnam in Colombo on 28th November 1993. She was 81 years old at the time of her death.

She was born in Vaddukoddai to Mr. & Mrs. S. R. Beadle of Vaddukoddai in 1922 and had her education at Uduvil and Vembadi Girls' College. Her husband late Mr. P. W. Ariaratanm was the Supervisor of the Primary School Department of Jaffna College. She was the President of the YMCA and Women's Guild and contributed much to the Church and helped many, mainly the poor. The funeral took place on 30th November 1993 at Raymonds Parlour, Colombo. A Prayer Meeting was held at her residence "Malar Vasa", Vaddukoddai on the day of her funeral. Tribute was paid by Mr. G. Rajanayagam, sPrincipal, Jaffna College and the ervice was conducted by the Rev. A. A. Paul.

She leaves behind her children Ratnarajan ( Zambia ) Chandar-rarajan ( Colombo ), Sarojini Mrs. Jesudasan UK ) and Malini (Mrs. Devakaruna, UK), brothers Sam Beadle, Nesarajah Beadle, Thevarajah Beadle and sisters Ponmalar ( Mrs. Edward), Kanakammalar ( Mrs. Ratnarajah), Ranjithamalar (Mrs. Chelvarajan) and Rajamalar ( Mrs. Thuraîratnam) to mourn her death. Her brother Navam Beadle prodeceased her.

### Thuriappah Gunanayagam

Mr. Thuriappah Gunanayagam of Chundikuli died on Tuesday 22nd February. He leaves behind his wife THEMBA, RAGULAN (son) Mrs. Gunasundari Jeyanathan and Priyadharsini (daughter). The funeral took place on the following day at his residence at Kachcheri – Nallur Rd. Jaffna.

## JAFFNA COLLEGE PRIZE GIVING (1993)

It was a glorious day, Saturday, February 12, for the Jaffna College Prize Giving. Not only was the College able to hold the festivities in the quadrangle for the first time in a number of years, and not only was the College band decked out in smashing new Scottish tartan uniforms, but we were also greatly honoured by the presence of the Anglican Bishop of Colombo, the Right Rev. Kenneth Fernando and his wife Chithra, as Chief Guests.

The College staff, students, and minor staff had all worked very hard to prepare for the unusual occasion. The Chief Guests were marched by the College Band (rehearsed for the occaion by Mrs Vimala Jebanesan), from the Bishop's Residence up the front entrance to the College. Every few feet garlands were placed around the necks of the Chief Guests by representatives of the various classes, such that the Bishop seemed fairly to disappear in a mound of fragrant blossoms.

After a welcome tea in the staff lounge, the procession got under way — the staff, members of the Board, and the officials of the College following with the Chief Guests. The occasion was further graced by Mrs. Selvaruby Sriskandarajah, the Principal of Vembadi Girls College, an old girl of Jaffna College, who gave the vote of thanks.

The programme opened with the singing of the vigorous hymn "Praise to the Lord, the Almighty, the King of Creation," led by the band, and the invocation given by Rev. A. A. Paul. Miss Priya Mahendran of the School gave a very well-delivered welcome speech.

Mr. G. Rajanayagam then gave the Principal's Report, also congratulating the Chief Guest on his willingness to undertake the journey to Jaffna. He emphasized that even though he has had to face stiff opposition and bitter criticism from extremists, the Bishop has been able to tell people in the South about the sufferings of the Tamil community. Mr. Rajanayagam mentioned the plaque awarded to the Bishop by the United Church of Christ in the U.S.A., partners in mission with the CSI, at their bi-annual Synod in June of 1993. The Principal also cited Chithra Fernando's long service in education and her present role as Secretary for Education within the National Christian Council.

The Principal also highlighted the election and the consecration of our former Principal, Rev. Dr. S. Jabanesan, as third Bishop of the Jaffna Diocese of this Church of South India. And this past year also saw the installation of Mr. G. Rajanganaya as Principal of the College at the Cathedral Church in Vaddukoddai on October 9, 1993.

Another highlight of the report was the opening of the Undergraduate Department at 464 Hospital Road in Jaffna, on October 2, 1993. The Rt. Rev. Dr. S. Jabanasan officiated, and more recently opened the Bishop Kulendran Memorial Hall there. Retired staff member Mr. S. Balachandran has been appointed Director. The constituency of the CSI rejoices in the revival of the Paranthan branch of Jaffna College, under the principalship of Mr. K. S. Thissairasa, where there are now 60 pupils and four teachers.

For many, the eagerly awaited moment was the speech of the Chief Guest. Bishop Kenneth Fernando spoke winningly of the College and the occasion, pointing out a number of valuable contributions that the College and its American missionary founders have made toward education in Sri Lanka. He generously enumerated five areas of particular leadership in 1) The English language, 2) Tamil and Sanskrit studies, 3) The introduction of Hebrew, Greek, and Latin into theological preparation, 4) the introduction of topics of science as developed in the U.S., and 5), but not least, the dissemination of the Christian faith in the Jaffna Peninsula.

Relative to present situation, Bishop Fernando pointed out that as Christians in Sri Lanka' we share a Common ground, a ground whereon every friend of man can meet. Again acknowledging the contribution of America to the language of human rights concerns, he quoted from the Declaration of Independence, insisting that the right to life, liberty, and the pursuit of happiness is the right of all Sr Lankans as well.

At the Round Table tea preceding the Prize Giving, Bishop Fernando further stated that we as Christians are members of the "Peace Brigade," as only this small minority spans both Communities. We have, he said, a significant role to playl in thi peace process, and he urged u, not to be passive in it.

This speech was followed by two items of entertainment songs from the musical Joseph and His Amazing Technicolor Dreamcoat, under the direction of Dr. R. G. Porter. The Carnatic dancers of the Senior Secondary School presented a story of Rama, Sita, and Hanuman, and the disuption of education at an ashrams ably directed by Miss Bremine Shantalingam, and accompanied by Jaffna College old girl, Miss Saradha Satchiyananthan ( now instructing at Ramanathan college in Carnatic music) and the College's own Mrs Jeeva Ratnasabapathy.

Registered as a News Paper at the P. O. Sri Lanka under No.Q /J/140/89 News Printed for the Jaffna Diocese of the church of South India by Arun Printers and Publishers Jaffna on Friday the 25th of February 1994 and Published by D. S. SOLOMON — Diocese office Vaddukoddai.